ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 14,685/3—1966 මාර්තු 7 වැනි සඳුදා—7.3.1966
14,685/3 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## மகாதேசாதிபதியின் பிரகடனம்

ஜி. ஜி. ஓ. இல. டபிள்யு. 63/66 (3)

### உத்தமராம் மகாதேசாதிபதியால் ஒரு பிரகடனம்

(முத்திரை)

டபிள்யூ. கொபல்லவ

பொது அவசரகால நிலைமையொன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளமை காரணமாக, நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதைக் குறித்தும் பொது அமைதியைப் பேணுவதற்கும் மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவைப் பொருள்கள் வழங்கிவருதற்கும் சேவைகளை நடாத்திவருதற்குமாக அவ்விதஞ் செய்தல் உகந்ததென நான் அபிப்பிராயப்படுவதனால்:

மகாதேசாதிபதி உவில்லியம் கொபல்லவ ஆகிய நான் 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரியையாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, இப்பிரகடனத்தால், அக்கட்டளைச் சட்டத்தின் II ம் பகுதியின் ஏற்பாடுகள், ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாறும் ஆண்டு மார்ச்சு மாதம் எட்டாம் தேதியிலிருந்து இலங்கை முழுவதிலும் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படுத்துகிறேன் என்பதனை எல்லோருமறிவீராக.

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாறுமாண்டு மார்ச்சு மாதம் ஏழாம் தேதி கொழும்பில் விடுக்கப்பட்டது.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

நி. விஜேவர்தன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.